**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.28/2018**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா, அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நரசிம்மன் | மதம் | : இந்து |
| த/பெ | : முனுசாமி | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : காவேரிராஜபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**06.03.2026**

**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எதற்காக சங்கர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் படிக்கவில்லை. 2ம் பிரதிவாதி முனுசாமிக்கு நான் தாய் மாமா என்றால் சரிதான். குப்பனுக்கு எத்தனை வாரிசு என்றால் 4 பேர். துரை, சந்திரகேஷ், முனுசாமி, பெரிய முனுசாமி ஆவார்கள். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் குப்பனுக்கு நான்கு ஆண் மக்கள் ஒரு பெண் என்றால் ஆமாம். அவருக்கு பெண் மகள் உள்ளார். குப்பனின் சொத்தை அவரது நான்கு ஆண் மக்களும் பிரித்து அவரவர் பாகத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். அவரவர் பாகத்தில் குடிசை போட்டுள்ளனர். வீட்டு மனையை தவிர்த்து விவசாய நிலம் உள்ளது என்றால் சரிதான்.

2. அந்த விவாசய நிலத்தையும் 4 பேரும் பாகம் பிரித்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் ஆமாம். சந்திரகேஷ்க்கு விவசாயத்தில் வரும் மகசூலை அந்த வீட்டில்தான் அடுக்கி வைப்பார் என்றாலும் சந்திரகேஷ் அந்த வீட்டிற்கு வந்து தங்கி செல்வார் என்றாலும் ஆமாம். சந்திரகேஷ்க்கு வந்த பாகத்தை அவருக்கு விற்பதற்கு முழு உரிமை உள்ளது என்றால் சரிதான். சந்திரகேஷ்

வழக்கு சொத்தை யாருக்கும் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. முனுசாமிக்கு எழுதி வைத்துள்ளார். சந்திரகேஷ் இறந்த பின்பு அவரது மகன் யோகநாதன்தான் அனுபவித்து வருகிறார் என்றால் ஆமாம். யோகநாதன் சங்கருக்கு சொத்தை விற்றுவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. சங்கர் குடிசை வீட்டை எடுத்துவிட்டு சிமெண்ட் சீட்டு போட்டு வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை.

3. சந்திரகேஷ் துரைகண்ணுவிற்கு எழுதி கொடுத்ததாக கேள்விப்பட்டேன் என்றாலும் அது எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். சந்திரகேஷ்க்கு பிறகு அவரது மகன் யோகநாதன் அனுபவித்து வந்து சங்கருக்கு விற்றுவிட்டார் என்றாலும் சொத்து சங்கருக்குதான் பாத்தியம் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி என் அக்கா மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முனுசாமிக்கு எழுதி கொடுத்ததாக சொல்லும் விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் அதை கேள்விப்பட்டுதான் சொல்கிறேன் என்றாலும் நாங்கள் தான் பேசி முடிவு செய்தோம். ஆனால் நான் பத்திர அலுவலகத்திற்கு செல்லவில்லை. யார் யார் பேசி முடிவு செய்தோம் என்றால் சின்ன சாமி, துரைகண்ணு, நான், துரைகண்ணுவின் மனைவி ஆகியோர் பேசி முடிவு செய்தோம். அப்போது சந்திரகேஷ் அங்கில்லை என்றால் பேசிவிட்டு சென்றுவிட்டார். அங்கு சென்று அவர் இறந்துவிட்டார். சந்திரகேஷ் அந்த பேச்சுவார்த்தைக்கு பின்பு பத்திரம் எதுவும் எழுதி தரவில்லை என்றால் இல்லை. அவர் மகன்தான் எழுதி தந்தார்.

(மறு விசாரணை இல்லை)